ஆண்தாய் போலே அணைத்த நம் தலைவர்
கண்களால் ஊட்டிய தாய்ப்பால்
அதைக்குடிக்க கிடைத்த நல் வாய்ப்பால்
பிறந்தது  பிறந்தது பிறந்தது பிறந்தது
தமிழீழ விடுதலைத் தாழ்ப்பாள்
தமிழீழ விடுதலைத் தாழ்ப்பாள்

மாவீரர் நீங்களே மறப்போமா நாங்களே  2
ஒளிமுகம் தோறும் புலிமுகம் பார்த்து
குல தெய்வம் போலே உம்மை கும்பிடுவோம் நாங்களே 2

உலகம் தோறும் உள்ள சொந்தம் உங்கள் வீரம் நினைக்கும்
மழையும் கூட இறங்கி வந்து உங்கள் துயிலிடம் நனைக்கும்  ஒ...
ஒ...ஒ...ஒ 2
பதுங்கு குழியில் இருக்கும் பிள்ளை என்று தாய்மை நினைக்கும் அது
பத்துமாசம் சுமந்து வயிற்றைத் தடவிப்பார்த்தே சிலிர்க்கும்
இறந்தவர் என்றா மறப்போம் உம்மை எத்தனை தலைமுறை நினைப்போம்

மாவீரர் நீங்களே மறப்போமா
நாங்களே  2

கோயில் மணிகள் உங்கள் புகழை ஊர்கள் தோறும் ஒலிக்கும்
அமைதி வணக்கம் முடிந்த நொடியில் ஈகைச் சுடர்கள் விழிக்கும்
ஒ....ஒ.....ஒ....
தலைவன் உரையில் எழுந்த உம்மைக் களங்கள் ஆட அழைக்கும் 2
இறந்தவர் என்றா மறப்போம் உம்மை எத்தனை தலை முறை நினைப்போம்
ஒ....ஒ.....ஒ.....ஒ.....ஒ......ஒ......ஒ

மாவீரர் நீங்களே மறப்போமா நாங்களே  2